## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இபலோகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இபலோகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான கோனப்பத்திரவ ஆயுள்வேத நிலையத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதிய மருந்துகளின் இருப்பு ரூபா.298,240 ஆக காணப்பட்டது இருப்பினும் மருந்துகளின் பட்டியலின்படி அவ் இருப்பு ரூபா.386,969 ஆக காணப்பட்டது, வித்தியாசம் ரூபா.88,729 அவதானிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | உரிய பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| | விடயம் | பெறுமதி ரூபா. | சமர்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | நிலையான வைப்புக்கள் | 23,422,189 | வைப்பு பட்டியல் | ஏற்றுக்கொள்ளப்படு கிறது. | எழுத்து மூலமான ஒப்பாய்வு ஆவணம் சமர்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | பொதுவான இருப்புக்கள் | 1,015,929 | இருப்பு பதிவேடு | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.5,190,994 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா.6,900,567 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலங்கள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்படட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரியும் வரியும் | 5,103,050 | 4,389,315 | 6,090,115 | 1,825,100 | 2,962,400 | 4,183,035 | 3,200,395 | 3,525,900 |
| (ii) | வாடகை | 10,370,483 | 10,337,289 | 10,713,063 | 1,584,311 | 9,010,586 | 8,877,828 | 9,211,969 | 1,960,085 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 403,700 | 311,170 | 393,420 | 147,250 | 416,350 | 451,550 | 385,050 | 229,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 20,998,500 | 22,533,769 | 18,796,654 | 23,868,247 | 17,154,000 | 18,435,126 | 17,602,484 | 20,131,132 |
| | மொத்தம் | 36,875,733 | 37,571,543 | 35,993,252 | 27,424,908 | 29,543,336 | 31,947,539 | 30,399,898 | 25,846,617 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ் வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| (i) கடந்த வருடத்துடன் தொடர்புடைய நிலுவையாகவுள்ள கழிவகற்றல் வரி மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான கழிவகற்றல் வரிகளின் பெறுமதி | அது அறவிடப்படவுள்ளது. | அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.1,227,900 அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | மீளாய்வாண்டில் அறவிடுவதற்காக பற்றுசீட்டு தயாரிக்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரக்கட்டணம், வர்த்தக வரிகள், மற்றும் தொழிற் துறை வரிகள் ரூபா. 1,532,750 ஆகும். இருப்பினும் 2023 திசெம்பர் 31 வரை ரூபா.120,250 அறவிடப்பட்டுள்ளது. | அது அறவிடப்படவுள்ளது. | அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | நிலுவை வாகன வாடகை ரூபா. 583,250 மற்றும் நிலுவை கடை வாடகை ரூபா.403,180 2023 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ii) | முன்னைய வருடங்களில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்து ஒன்று தொடர்பான நிலுவை வாடகை ரூபா.25,600 மற்றும் 2023 வாடகைக்கு விடப்பட்ட 02 சொத்துக்கள் தொடர்பான நிலுவை வாடகை ரூபா.31,644 அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| **(இ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | 2022 ஆண்டிற்கான பற்றுசீட்டு தயாரிக்கப்பட்ட விளம்பர பலகை வருமானம் ரூபா. 56,720, இருப்பினும் ரூபா.20,800 அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ii) | 2023 டிசம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய விளம்பர பலகை வருமானம் ரூபா.197,720 இருப்பினும் 69 சதவீமான ரூபா.137,000 அறவிடப்பட்டிருக்கவில்லை | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | சபைக்கு சொந்தமான நெசல நிலையத்தில் நடாத்தப்பட்ட பாடநெறி தொடர்பாக அறவிடப்பட வேண்டிய | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணம் ரூபா.222,200 அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | 31 திசெம்பர் 2023 இல் மாகாணசபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.14,048,741 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.8,397,350 அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயற்றிறன்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப்பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் காணப்படுகின்ற 30 முக்கிய விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் 2023 திசெம்பர் 31 வரை அவ்விதமான உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்விதமான உப விதிகள் உருவாக்கப்படவுள்ளது. | உப விதிகள் உருவாக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மகிழுப்பல்லம வணிக வளாகத்தில் அமைந்துள்ள 18 கடைகளுக்கும் சேனாபுர வணிக வளாகத்தில் அமைந்துள்ள 05 கடைகளுக்கும் உரிய குத்தகை தாரர்களுடன் உடன்படிக்கை | உடன்படிக்கை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கைக்கு செல்வதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட. வேண்டும். |

செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 18 ஆம் திகதி விபத்துக்குள்ளான பிரதேச சபைக்கு சொந்தமான டிப்பர் வாகனமானது பழுது பார்த்தலுக்கு சபையினால் 2022 இல் ரூபா.306,500 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் இழப்புக்கு காரணமானவர் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை, இழப்பினை ஈடு செய்வதற்கான இறுதி ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான ஒழுக்காற்று விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் உரியவரிகளிடமிருந்து அறவிடப்படும். | முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட வேண்டும், இழப்பு அறவிடப்பட வேணடும். |